1970 நவம்பர் 30]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்த அறிவு மட்டும் போதும் என்று கருதப்படுகிற துறைக்கு அவர்களுக்கு முதலிடம் தந்து வேலை வாய்ப்பு தரப்படும். 'டெக்ஸ்ட் புக் பிரஸ்ஸிலே' ஃப்ரூப் திருத்த வேண்டும். அதற்கு நன்றாகப் படித்து இருக்கும் பண்டிதர்களை எடுத்துக்கொள்ளலாம். அப்படிப்பட்ட வேலைகளுக்கு, அல்லது அந்தத் தகுதி தேவைப்படும் வேலைகளுக்கு அவர்களைத் தேர்ந்தெடுக்கலாம்.

திரு. எம். சுரேந்திரன் : தமிழில் படித்தவர்களுக்கு வேலை அளிப்பதிலே முதல் இடம் அளிப்பது என்று அரசாங்கம் அறிவித்திருக்கிறதே, அதற்கு அனுசரணையான முறையிலே எல்லா விதிகளும் திருத்தப்பட்டு விட்டனவா என்று அறிய விரும்புகிறேன்.

(பதில் இல்லை)

Bonded Labour in Nilgiris District.

* 63 Q.—Thiru G. GOMATHYSANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Agriculture and Harijan Welfare be pleased to state :

(*a*) whether any study team of the State Government has reported about the existence of Bonded Labour in the Nilgiris District during 1969–70; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பாண்டெட் லேபர் என்று சொல்லப்படுகிற ஒப்பந்தக் கூலிகளின் நிலை மோசமாக இருக்கிறது. இவர்களை எப்பொழுது வேண்டுமானாலும் வேலைக்கு அமர்த்திக் கொள்ளலாம், எப்பொழுது வேண்டுமானாலும் திரும்பப் போகச் சொல்லி விடலாம் என்ற நிலை உருவாகியிருக்கிறது. இதுவரையில் இல்லாவிட்டாலும், இனிமேலாகிலும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து, நிலையைச் சீர்படுத்த ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இப்படிப்பட்ட ஒப்பந்தக் கூலி முறை இருக்கின்றதா என்று மத்திய அரசுக் குழு ஒன்று 1967-ஆம் ஆண்டில் நமது மாநிலத்தில் பூராவும் சுற்றிப் பார்த்து, நீலகிரி மாவட்டத்தில் இப்படிப்பட்ட நிலை இருப்பதாகச் சொன்னார்கள். அதன்மீது மாநில அரசாங்கம் நடவடிக்கை எடுத்து நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் இதைப்பற்றி விவரம் ஆராய்ந்து அனுப்புமாறு கோரியது. அவரும் விசாரித்து, பனியன் சமுதாயத்தினரை செட்டியார்கள் தங்கள் பண்ணையில் வைத்து வேலை வாங்கிக்கொண்டு, அவர்களுக்கு சம்பளம் கொடுத்து, அவர்களது பண்ணையிலே வாழ்வதற்கும் அவர்களுக்கு

இடமளித்து அவர்களை உபயோகப்படுத்தி வந்தார்கள் என்று கூறியிருக்கிறார்கள். எந்தவிதமான முறையிலும் ஒப்பந்தம் செய்து கொண்டு யாரும் வேலைக்கு வைக்கப்படவில்லை என்ற விவரம் அரசாங்கத்திற்குக் கிடைத்திருக்கிறது. ஒப்பந்தம் செய்து கொண்டு, பாண்டெட் லேபர் என்ற முறையில் எந்த மாவட்டத்திலும் யாரும் வேலைக்கு வைத்துக் கொள்ளப்படவில்லை.

திரு. கே. பி. எஸ். மணி : நீலகிரி மாவட்டத்தில் ஒப்பந்தக் கூலிகள் வைத்திருப்பதுபோல், தஞ்சை மாவட்டத்தில், பண்ணையாட்கள் என்ற முறையில் வைத்து இருந்தது போலவே, அவர்கள் வேலைக்கு வருவதற்கு முன்பே அவர்களிடம் எழுதி வாங்கிக் கொண்டு, அங்கே குடியிருந்துகொண்டு அவர்கள் எல்லா வேலைகளையும் செய்யவேண்டும், அவர்கள் நிர்ணயிக்கிற கூலிகளை இவர்கள் ஒத்துக்கொள்ள வேண்டும் என்ற பாரம்பரியம் இருக்கிறது. எனவே, அரசாங்கம் இவ்வளவுதான் குறைந்தபட்சக்கூலி இருக்கவேண்டும் என்று நிர்ணயித்து, அவர்கள் வாழ்க்கையில் சௌகரியமாக இருக்கவேண்டுமென்று கருதி, அதற்கு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : பண்ணையாட்கள் சட்டம் வருவாய்த் துறையில் இன்னும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. பண்ணையாட்கள் சட்டம் வேறு, பாண்டெட் லேபர் ஒப்பந்த முறை வேறு. மனிதனை அடிமையாக எழுதிக் கொடுத்து விட்டு வேலைக்கு வைத்துக் கொண்டிருக்கிற முறை இப்பொழுது எங்கும் இல்லை என்றுதான் கூறினேன். மற்றபடி தஞ்சை மாவட்டத்தில் விவசாயக் கூலிகளாக இருந்து, போதுமான கூலி இல்லாமல் இவ்வளவு தான் வாங்கவேண்டும் என்று கட்டாயப்படுத்தி வேலை வாங்குகின்ற முறை, அது வேறு.

திருவண்ணாமலையில் நெற்பயிர்களை அரிக்கும் பூச்சிகளைத் தடுக்கும் ஆராய்ச்சி நிலையம்.

* 64 வினா—திரு. கே. சகாதேவக் கண்டர் : மாண்புமிகு வேளாண்மை, அரிசனநல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெற்பயிர்களை அரிக்கும் பூச்சிகளைத் தடுப்பதற்காக பூச்சிகளைத் தடுக்கும் ஆராய்ச்சி நிலையம் (Biolegical Control Centre) ஒன்று வட ஆற்காடு மாவட்டம், திருவண்ணாமலையில் ஏற்படுத்த திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலையில் நெற்பயிற்களை அழிக்கும் பூச்சிகளைத் தடுக்கும் ஆராய்ச்சி நிலையம் ஏற்படுத்தும் திட்டம் எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கே. சகாதேவக் கண்டர் : திருவண்ணாமலை வட்டத்தில் சாத்தூர் அணைப் பகுதியில் சுமார் 20,000 ஏக்கர் நஞ்சைப் பயிர் செய்யப்படுகிறது. அந்தப் பயிர்களை அதிகமாக பூச்சி சாப்பிடுகிறது என்ற காரணத்தினால், 4, 5 முறை மருந்து அடிக்கப்படுகிறது.